**செய்தி வெளியீடு எண் : 1357** **நாள் : 11.07.2023**

**செய்தி வெளியீடு**

2023–2024–ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை வரவு – செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழிசெல்வராஜ் அவர்கள் கீழ்க்காணும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் வீடுகள் தூய்மைப் பணியாளர் நல வாரிய மானியத்துடன் ரூ.55 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்."

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கி அரசாணை (நிலை) எண். 84, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள் 07.07.2023–இல் ஆணை வெளியிடப்பட்டது.

**அரசு செயலாளர்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in